424

பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம்; கர, பங்குனி; 4—4—52. தளிர்-27

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அரிய செயல்

நற்செயல்களெல்லாம் பொதுவாக அரிய செயல்களென்றே கூறவேண்டும். ஏனென்றால், அவற்றைச் செய்வது அவ்வளவு எளிதன்று. தீமையில், நினைவு சொல் செயல்கள் நிகழ்வது நீங்கி உள்ளம் நற்செயல்களில் ஊக்கங் கொள்கின்றபோதே அவை நன்கு செய்கையில் வரும்.

புலனடக்கம், மனவடக்கம், அறிவு தீது நீக்கம் முதலிய அரிய பேறுகளும் திறங்களுமெல்லாம் அதற்கு வேண்டும்.

மேலும், நற்செயல்களெல்லாம் உலகுயிர்களுக்கு நலம் பயப்பனவாதலின், அவை பொதுப் பணிகளாகின்றன. வேறு பயன் கருதாது அவற்றைச் செய்யும் போது, அவை ய இறைபணிகளாகும். ஆகவே, நற்பணி, பொதுப்பணி, இறைபணி, செயற்கரியன என்பனவெல்லாம் ஒன்றே!

பிறவி படிப்படியாக உயர்வதற்கும், வினையின் நீங்கி விளங்குவதற்கும், அருளில் ஒன்ற உய்வதற்கும் ஒரு சிறந்த வழி வாழ்க்கையில் உண்டு. அது, அவரவர் நிலைக்குச் சிறிது சிறிது அரிய செய்கைகளை அவ்வப்போதும் முயன்று முயன்று செய்து கொண்டே உயர்ந்து உயர்ந்து விளங்கி விளங்கி உய்ந்துபோதல்!

உடலும் உள்ளமும் தூய்மையடைதற்கும், ஆற்றலும் இனிமையும் அடைதற்கும், இத்தகைய கைத்திருத் தொண்டின் கடப்பாடுதான் ஏற்ற வாயிலாய் இருக்கின்றது.

உலகத்தில் ஒருவர் வாயிலாக ஒருவர் முன்னேற வேண்டியிருத்தலின், இயற்கையில் இப் பணித்திறம் இன்றியமையாததாய் அமைந்துளது.

ஆகவே, அரியன செய்வோர் பெரியாராயினர்; அல்லாதார் சிறுமையுடையரே யாதலின், சிறியராகின்றனர்.

செயற்கரிய செய்வார் பெரியர்;
சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

செயற்கு அரிய செய்வார் — செய்வதற்கு அருமையான நற்செயல்களைச் செய்கின்றவர்; பெரியர் — பெரியோர் எனப்படுவர். செயற்கு அரிய செய்கலாதார் — அங்ஙனம் செய்வதற்கரிய நற்செயல்களைச் செய்யும் முயற்சி யில்லாதவர், சிறியர் — சிறியோர் எனப்படுவர்.

பெரியர் சிறியர் என்றதில், போற்றுதலும் இகழ்தலும் குறிப்பாற் பெறப்பட்டன.

அரிய செயல்கள் என்றது, ஐந்தவித்து அருளில் அமர்ந்து அவ் வாற்றலால் உலகுக்குச் செய்யும் இறைபணிகள்.

'செய்வார்' 'செய்கலாதார்' என்றார், செய்யும் ஊக்க முயற்சியும் உடைமையும் இன்மையுந் தோன்ற; நடக்கையிற் கொண்டு வரும் ஆற்றலும் அஃதில்லாமையும் இதனால் தோற்றும்.

தகாதன செய்வாரே சிறியரென்று எண்ணுவார்க்குத் தக்கன செய்யாதாரும் சிறியரே என்று காட்டுவார், 'சிறியர் செயற்கரிய செய்கலாதார்' என எதிர்மறையானும் இடித்துரைத்தார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | | 0 1 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | கர, பங்குனி | களிர் |
|---|---|---|
| 4 | 4-4-52 வெள்ளி | 27 |


## சுற்றுப் பிரயாணம்

மேனாட்டாரிடையில் ஒரு சிறந்த வழக்கம் உண்டு. தாம் எப்போதாவது வெளி நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தால் தாம் சென்று காணும் நாட்டுப் பழக்க வழக்கங்கள் கலைப் பாகுபாடுகள் நாட்டு நிலை இன்ன பிறவற்றைத் தம் காலத்தில் வாழும் மக்களுக்கும் பிற்கால மாந்தருக்கும் பெரிதும் பயன் தரும் வகையில் மிக விளக்கமாக எழுதி வைப்பார்கள். வெளி நாடுகளில் சென்று நிலைமைகளை நேரில உணராதவர்க்கு இந்நூல்கள் பெரிதும் துணை புரிகின்றன. பிற நாட்டு நாகரிகம் வாழ்க்கை யியல்பு கலை யியல்பு முதலானவற்றை ஆய்ந்தறிந்து தம் நாட்டு நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தாம் இன்னும் சிறந்துயர வழிகள் எவையேனும் காணப்பட்டால் அவைகளைத் தவறாமல் மேற் கொள்ளுதற்கு அந்நூல்கள் உதவுகின்றன.

இதுவரை நாம் கேள்வியாலும் வரலாற்றாலும் அறிந்த வரையில், ஆங்கிலேயர் சீனர் போன்ற அறிஞர்களில் யாரும் தாம் வெளி நாடுகளில் கண்டும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளை எழுதி வைக்கத் தவறியதில்லை. கி. மு. நான்காம் நூற்றாண்டில் மௌரிய சந்திரகுப்தன் அவையில் கிரேக்க தூதவனாகப் பணியாற்றிய மெகஸ்தனிஸ் எழுதி வைத்த 'இண்டிகா' வினால் நாம் இன்று அடையும் பயன் அளவிட்டுரைக்க இயலுமா? கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த 'ஹ்யூவன் ட்சியாங்' எழுதி வைத்த வரலாறு பண்டைய வரலாற்றுக்கு எத்துணையளவுக்கு உதவி செய்கிறதென்று அளவிட முடியுமா? 'மங்கோ பார்க்கு' முதலிய அறிஞர்கள் எழுதி வைத்த செலவு நூல்களன்றோ இருண்ட கண்டம் என்று கூறப்பட்ட ஆப்பிரிக்காவை இக்கால மக்களுக்கு ஒளியுள் [illegible] நாட்டினர் [illegible]

நம் நாட்டவர்க்குப் பெரும்பாலும் இவ்வழக்கம் இல்லை என்று கூறி விடலாம். திரு. ஏ. கே. செட்டியார் போன்ற ஓரிரண்டு பேர் இவ்வகையில் நமக்கும் பெருமை தருகின்றனர். பலரும் இத்துறையில மிகுதியாக ஈடுபட வேண்டும். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற உணர்ச்சியில், வெளி நாடுகட்குச் செல்லும் பெருமக்கள் ஒவ்வொருவரும் அவ்வவ் விடங்களில் தாம் காண்பதும் கேட்பதும் குறிப்பெடுத்துக் கொணர்வதுடன் இனிய நூல்களாக்கித் தரவும் முயல்வது நல்லது.

காலஞ்சென்ற அமெரிக்கத் தலைவர் திரு. ரூஸ்வெல்டு அவர்களின் துணைவியார் திருமதி எலீனர் ரூஸ்வெல்டு அம்மையார் தம் இந்தியச் சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகளை மிக அழகாக 'என் நாள்' (**My day**) என்ற தலைப்பில் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் எழுதி வந்தது அன்பர்கட்கு நினைவிருக்கும். அம்மையார் தம் அநுபவங்களை மிக இனிய முறையில் எழுதியிருக்கிறார்கள். திருவாங்கூர்ப் பகுதியில் கல்வி முறைச் சீரமைப்பினைப் பற்றி அவர்கள் கூறியிருப்பது இந்திய மக்கள் அனைவருக்குமே மகிழ்வளிக்கக் கூடிய செய்தி.

இத்தகைய செலவுக் குறிப்பு நூல்கள் பயன் தரும் வகையில் வெளி வர நம் நாட்டினின்று வெளி நாடு செல்லும் ஒவ்வொருவரும் மேலு மேலும் முயன்று வருதல் கடமை.

—சி. து. க.

# * என் அன்பே! *

(மா. கோவிந்தராஜன்)

அவ்விடத்தினின்று மீண்டும் தென் திசை நோக்கி வந்தால் கடலை நோக்கிக் கம்பீரமாய் நிற்கும் கட்டிடங்கள் பலவற்றைக் காண்பாய். நகரின் முக்கிய பாங்குகள், வியாபார நிலையங்கள், தலைமைத் தபால் நிலையம் யாவும் அங்கேதான் உள்ளன.

அவ் வீதி பிறகு மேல் திசை நோக்கித் திரும்புகிறது. அவ் வீதியின் ஆரம்பத்தில் கோட்டை போல் கம்பீரமாய் நிற்கும் சிகப்புக் கட்டிடத்தைக் காண்பாய்; இதுதான் உயர் நீதி மன்றம். இதனுள்ளே சென்றால் இதன் கம்பீரமான அழகைக் கண்டு வியக்கிறோம்.

இக் கட்டிடத்தின் மேலே, ஒரு புறத்திலே, சுற்றிச் சுழலும் ஒளி மிக்க விளக்க மேந்தி, ஓங்கி உயர்ந்து நிற்கும் கோபுர மொன்றைக் காண்பாய். இது தான் கலங்கரை விளக்கம். மக்களுக்கு வழி காட்டி ஒரு இலட்சியம் நோக்கி அழைத்துச் செல்லும் ஓர் உத்தமத் தலைவன் போல், கடலில் கரை நோக்கி வரும் கப்பல்களைப், பாதுகாப்பு மிக்க துறைமுகம் நோக்கி, தன் ஒளிக் கரம் நீட்டி அழைக்கிறது இக் கலங்கரை விளக்கம். சுற்றிச் சுற்றி அது கதிர் வீசும் அழகு காணத்தக்க காட்சி.

இவ் வீதி வழியே சற்றுச் சென்றால் "சைனா பஜார்" என்று நான் உனக்குப் பல முறை சொல்லியிருக்கும் கடை வீதியைக் காண்பாய். நகரின் பல பகுதியிலும் வாழும் பல் வகை மக்களையும் நீ அங்கே மாலை வேளையில் காணலாம்.

அந்தி நேரத்திலே அவ்விடம் கண் கவர் தோற்றமளிக்கும். நடை பாதையில் பல் வகை மக்கள் சாரி சாரியாய்ச் செல்வது ஓர் அழகிய காட்சியாயிருக்கும். மேடு பள்ளம் நிறைந்த பாதையிலே, தேங்கித் தயங்கிச், சுழிந்து ஓடும் நீரோடையைப் போல், அம் மக்கள் சாரியும் நின்று தயங்கிச் சென்று கொண்டிருக்கும். நதிக் கரை முழுதும் இயற்கையின் எழில் மிகுந்து விளங்குவதே போல், இங்கேயுள்ள கடைகளில் செயற்கையின் வண்மையைப் பேசும் மனிதனின் கைத் திறத்தையும், அறிவின் ஆற்றலையும், கற்பனை உயர்வையும், கலை யுணர்ச்சியையும் பேசும் பல வண்ண அழகுப் பொருள்கள், ஆடை அணிகள் அங்கே குவிந்து கிடக்கும். மேலும் அவ்விடத்திற்கு அழகு செய்யும் மேலுள்ள மின் விளக்குகள் கண்ணுக்குக் குளுமையான நீல ஒளியைப் பொழிந்து கொண்டிருக்கும். அந் நீல ஒளிப் பெருக்கிலே, பல் வகை அணங்குகள் பல நிற ஆடைகளிலே நடமாடும் காட்சியானது, வானத்தினின்று வெண்ணிலவு பொழியும் பால் போன்ற ஒளிப் பெருக்கிலே, கீழே சோலைகளில் பூத்துள்ள பல நிறப் பூக்கள் இடம் பெயர்ந்து நடமாடுவது போல் இருக்கும்.

அந்த இடத்தின் எழில் மயக்கத்தினின்று மீண்டு, அங்கே கடைகளில் வனப்புடன் விளங்கும் ஆடை அணிகளினின்று உன் அழகிய கண்களையும், உள்ளத்தையும் மீட்டுக் கொண்டு மேலே சென்றால் சற்றுத் தூரத்தில் அவ் வீதி மேற்கு நோக்கித் திரும்பும்.

அவ் வீதியிலே நீ முதலில் காண்பது குன்று போல் நிற்கும் மூன்று கட்டிடங்கள். கருங் கல்லில் கம்பீரமாய் நிற்கும் கட்டிடந்தான் ரயில்வே அலுவலகம். அதனருகில் செந் நிறத்தில் தோன்றும் கட்டிடமே சென்ட்ரல் ரயில் வண்டி நிலையம். அதன் எதிரில் தூய்மை வடிவாய், வெண் மேனியுடன் விளங்குவது ஜெனரல் ஆஸ்பத்திரி. வெண்மை நிறத்தைக் கண்டால் மனதிலே தூய்மையும், சாந்தியும் பிறப்பதை அறிந்து தானோ என்னவோ, நோயாளிகளுடன் பழகும் அங்குள்ள டாக்டர்களும், நர்ஸ்களும் தூய்மையான வெண்மை ஆடையில் நடமாடுகிறார்கள். அதே நிறத்தையே அக் கட்டிடமும் கொண்டிருக்கிறது. இந் நாட்டிலே முதன் முதல் எழுந்த மேல் நாட்டு மருத்துவ நிலையம் இதுவே.

இன்னும் சற்றுத் தூரம் சென்றால் மூர் மார்க்கெட் எனப்படும் கடைக் கூடத்ததைக் காண்பாய். அதைப்பற்றி அதிகம் எழுதுவது அவசியமன்று. அதற்கு அடுத்தாற்போல் உள்ள பெரும் கட்டிடந்தான் சென்னைக் கார்ப்பரேஷன். அதாவது உன் ஊரிலுள்ள முனிசிபாலிடி போன்றதே இது. இந் நகரின் நிர்வாகத்தை இக் கார்ப்பரேஷன் தான் கவனித்து வருகிறது.

# சிலப்பதிகாரம்

## 24. பத்தினிப்பெண்டிர் மூவர்

'முத்துசாமி'

பாண்டிய மன்னனும் கோப்பெருந் தேவியும் அரசு கட்டிலிலிருந்து இறந்து வீழ்ந்த பின்னரும் கண்ணகிக்குச் சீற்றந் தெளியவில்லை.

வீழ்ந்த கோப்பெருந் தேவியினை நோக்கி முற்பகலில் ஒருவன் பிறனுக்குத் தீங்கு செய்தால் தான் கேடுறுவதை அன்றைக்குப் பிற்பகலிலேயே காண்பான் என்று கூறினாள். மேலும் கண்ணகி ஆறாப் பெருஞ் சீற்றத்துடன் சிறந்த பத்தினிப் பெண்டிர் தோன்றிய நாட்டில் தான் தோன்றியதாகக் கூறிச் சோழநாட்டில் தோன்றிய எழு பத்தினிப் பெண்டிர் வரலாற்றினையும் எடுத்துக் காட்டினள். அவ்வாறு எழுவர் வரலாற்றினையுங் கூறி இறுதியில்,

"பட்டாங்கு யானுமோர்
பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ
டொழிப்பேன் மதுரையும்....."

என்று வஞ்சினங் கூறினள். அதாவது யானும் அவ்வெழுவரைப் போன்ற பத்தினியாயின் என் கணவற்குத் தீங்கு செய்த அரசன் மட்டுமேயல்லாமல் அவன் அரசு செலுத்திய இம்மதுரை மாநகரையும் அழிப்பேன் என்றபடி.

வீழ்ந்த கோப்பெருந் தேவி உயிர் நீத்து வீழ்ந்தாள் என்று அறியாமல் அவளை நோக்கி வஞ்சினங் கூறினள். அறிந்திருந்தால் உடன் உயிர் நீத்த அவள் பெருமையையெண்ணி ஒரு வேளை சினந் தணிவெய்தியிருத்தல் கூடும்.

தான் செய்தது குற்றமென்றும் அதனால் தனக்கு மட்டுமேயன்றித் தன் மரபுக்கே இழுக்காயிற்றென்றுணர்ந்த அளவிலேயே உயிர் நீத்தான் பாண்டிய மன்னன். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்" என்ற குறளுக்கு இலக்காய் நடந்துகொண்ட அவன் பெருமையை எங்ஙனம் எடுத்தியம்ப இயலும்! அவன் பெருமையைக் கண்ணகி அறியாதது சீற்றத்தின் வயப்பட்டுத் தன்னுணர்வு இழந்திருந்தமையால்தான். அதுமட்டோ? பாண்டிமாதேவி தன் கணவன் இறந்தான் என்று அறிந்த அளவிலேயே தானும் எவ்வித முயற்சியுமின்றி உயிர் நீத்தாள்! வேறு பல வரலாறுகளில் பத்தினிப் பெண்டிர் கணவன் இறந்தபின் உயிர் வாழ விரும்பாமல் நெருப்பில் விழுந்திறந்ததாகக் கூறப்பட்டிருக்கும். அவ்வாறல்லாமல் கணவன் இறந்தான் என்று உணர்ந்த உணர்ச்சியிலேயே உயிர் நீத்த இவள் பெருமையை எங்ஙனம் புகழ இபலும்! புகழ இயலாத காரணம் பற்றியே கண்ணகியின் கற்பின் பெருமைக்கு ஒரு இலக்கியம் எழுந்தது போல இவளுக்கு ஒரு இலக்கியம் எழவில்லை போலும்.

இச் சிலப்பதிகாரக் கதையோடு தொடர்புடையவர்களாக இதுகாறும் மூன்று பத்தினிப் பெண்டிர் வரலாறுகள் வந்ததை அன்பர்கள் அறிவார்கள். அவர்கள் மாதவி, கண்ணகி, கோப்பெருந் தேவி (பாண்டியன் மனைவி) என்னும் மூவராவர். மாதவி கோவலனைப் பிரிந்த பின் நோன்புக் கோலத்திருந்து வாழ்நாள் முழுமையுங் கழித்தவள். கண்ணகி கணவனையிழந்து பதினான்கு நாளளவும் இருந்து விண்ணுலகெய்தியவள். கோப்பெருந் தேவி கணவனைப் பிரிந்திராமலே உடனிறந்து கணவனோடு தானும் சென்றவள். இம்மூவரில் யாருடைய கற்பின் பெருமை தலைசிறந்தது என்பது சொல்லாமலே விளங்கும்.

எனினும், கோப்பெருந் தேவியின் கற்பின் சிறப்பினை விளக்கக் காவியம் ஒன்றும் எழாமலிருக்கக் கண்ணகியின் கற்பின் பெருமை மட்டும் விளங்க உலகறிய ஒரு ஒப்பற்ற பேரிலக்கியம் எழுந்தது, கண்ணகியின் வரலாற்றில் நிகழ்ச்சிகள் அதிகமிருப்பதும் அரைசியலில் பிழைத்தவர்க்கு அறம் கூற்றாகும் என்பதும் உரைசால் பத்தினியை ஏனோரேயன்றி வானோரும் ஏத்துவர் என்பதும் ஊழ்வினை உருத்து வந்தூட்டுமென்பதுமாகிய மூன்று உண்மை

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

களும் விளங்கக் காணக்கிடக்கிறது என்பதும், கணவனோடு விண்ணுலகெய்தியதை நேரில் கண்டு குறவர்கள் கூறினமையுமாகிய காரணங்களாற் போலும்.

பின்னர், காட்சிக் காதையில் சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளை நோக்கி,

"உயிருடன் சென்ற
ஒரு மகள் தன்னினும்
செயிருடன் வந்தவிச்
சேயிழை தன்னினும்
நன்னுதல்! வியக்கும்
நலத்தோர் யாரென',

வினவினன் என்று வருகிறது. அவ் வடிகளில் ஆசிரியர் பாண்டிமாதேவியை 'உயிருடன் சென்ற ஒரு மகள்' (கணவன் உயிரோடு சென்ற ஒப்பற்றவள்) என்றும், கண்ணகியைச் 'செயிருடன் வந்தவிச் சேயிழை' (செற்றத்தோடு இவண் வந்த சேயிழை) என்றும் கூறியிருத்தலால் பாண்டி மாதேவியின் தலைசிறந்த கற்பின் தன்மை புலனும்.

ஆகவே இச் சிலப்பதிகாரக் காதையில் தொடர்பு கொண்டு வரும் மூன்று பத்தினிப் பெண்டிரில் பாண்டி மாதேவி தலையாய கற்புடையவள் என்றும், கண்ணகி அதற்கடுத்த இடையாய கற்புடையவள் என்றும், மாதவி கடையாயவள் என்றும் ஒத்திட்டுப் பார்க்கும்போது பெறப்படுதல் காண்க.

சிலர் பாண்டி மாதேவியின் கற்பை ஆறிய கற்பென்றும் அறக் கற்பென்றும், கண்ணகியின் கற்பைச் சீறிய கற்பென்றும் கூறுவர். மாதவியின் கற்பு 'சாதாரண' மாதரார் கற்பினைப் போன்றதே.

# வேற்றுமைக்குரிய உரிமை

நாடு, மொழி, சமயம், நிறம் முதலிய இயற்கை வேறுபாடுகள் உலகிலமைந்த வெப்ப தட்பங்களுக் கேற்பவும், உயிர்களின் நிலைகளுக் கேற்பவும் இறையருளால் அமைந்துள்ளன. உயிர்களை முன்னேற்றுவதற்காக தமக்குரிய காலம் வரை இருந்து பணியாற்றும் உரிமை இவ்வியற்கை வேறுபாடுகளுக்குண்டு. இவ்வுரிமையைக் குறைப்பதும் மறுப்பதும் முறையன்று.

ஏறக்குறைய உலகிலமைந்த தட்ப வெப்ப நிலைகள் யாவும் இந் நாட்டில் அமைந்துள்ளன என்னலாம். இதுவேயுமன்றி இந்நாட்டுப் பழங்குடிகளாகிய தமிழர் இன்றும் சிலர் வாழ்ந்து வருவதனாலும் வெளி நாட்டவர் பலர் அடிக்கடி படை எடுத்து வந்து ஆண்டதனாலும், வேற்றுச் சமயத் தொண்டர் தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டதனாலும் புது மொழிகள் பல தோன்றியதாலும் வேறுபாடுகள் இங்கு மலிந்திருப்பது இயல்பே. எனினும் இந்திய மக்களாட்சியில் அனைவரும் தத்தம் கொள்கைகளின்படி பிறர்க்கேதும் தீங்கின்றி வாழ உரிமை உண்டு. இவ்வுரிமை உணர்ச்சி அரும்பியதிலிருந்து அதாவது ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை அடையு முன்னரே மக்கள் தத்தம் பண்புகளுக் கேற்ப வாழ விழைந்தனர். இதற்கு அவரவர் தாய் மொழிகளே உயிராதலையும் அறிந்தனர்; உயிராகிய தம் மொழிகளை வாழ வைக்க அவை ஆட்சி மொழிகளாதல் வேண்டும். மொழி வழி மாகாணங்கள் அமைந்தாலன்றி தம் மொழிகளுக்கும் தமக்குரிய பண்புகளுக்கும் ஏற்றந் தர இயலாதென்பதனையும் உணர்ந்து இந் நாட்டை மொழி அடிப்படையில் 21 மாகாணங்களாக அமைக்க வேண்டுமென்று 1920ம் ஆண்டில் நாகபுரியில் நடந்த 'காங்கிரஸ்' மாநாட்டின் வாயிலாக முடிவு செய்தனர். வட நாட்டில் இக் கருத்துப்படியே மாகாணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு நீண்டகாலம்வரை ஒரு திட்டமான எல்லையுடன் தமிழ் மொழியையும் பண்பையும் நன்கு வளர்த்ததெனினும் சில நூற்றாண்டுகளாக தெலுங்

குருகுலக் கைத்தறிகளில்
நெய்த
**மேல் துட்டைகள்**
**(டவல்கள்)**
முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!
மொத்தமாகவும் சில்லரை
யாகவும் கிடைக்கும்.
அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"
வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

கர், முகம்மதியர், மராத்தியர், ஆங்கிலேயர் ஆகியவர்களின் தாக்குதல்களால் பல கேடுகளுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளாயிற்று. அவற்றுட் பிறமொழிக் கலப்பும், மொழி அடிமையும் குறிப்பிடத்தக்கன.

நாடு விடுதலை அடைந்த உடனே குடிதழீஇக் கோலோச்ச வேண்டிய இந்திய மைய ஆட்சி, மக்கள் விருப்பப்படி மொழி வழி மாகாணங்களை முறைப்பட வகுத்து அவரவர் தாய் மொழிகளை அவ்வந் நாடுகளுக்கு ஆட்சி மொழிகளாக்கி இருக்கவேண்டும்.

இதற்கு மாறாக வேற்றொரு மொழியை, அது இந்நாட்டுட் பெரும்பாலோரால் பேசப்படுகிற தென்னும் காரணத்தைக் கொண்டு இங்குப் புகுத்தி ஆட்சி மொழியாக்கி அதனால் ஒரு ஒற்றுமையைப் பெறலாமென்று எதிர்பார்க்கின்றனர். ஒற்றுமை அன்பால் உண்டாவதாகையால், அதனை இக் கொள்கையால் பெறுவது அரிது. இவ் வருமைப் பாட்டிற்கு அண்மையில் நடந்த தேர்தலின் முடிவுகளும் அளவைகளாகும். மக்களிட மிருந்து ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் இனியேனும் பெற வேண்டுமானால் ஆட்சி, வேற்றுமைக்குரிய உரிமையை உடனே வழங்கவேண்டும். அதாவது மொழி வழி மாகாணங்களைப் பிரித்து அவ்வம் மொழிகளை அவ் வம் மாகாணங்களின் ஆட்சி மொழிகளாக்க வேண்டும். இதைச் செய்ய ஆட்சி தயங்குமானால் நாமே முயன்று பெறுவது நம் கடமை யாகும். இதனால் குறுகி வரும் எல்லையை இனியும் குறுக விடாமல் காத்துக் கொள்ளவும், அண்டை மொழியினருக்கும் நமக்கும் வளர்ந்து வரும் வெறுப்புணர்ச்சியை மேலும் வளரவிடாமல் நட்புணர்ச்சியைப் பெறவும் இயலும். இத்துறையில் ஆந்திரர் நன் முயற்சி எடுத்துள்ளனர். அவர்கள் வெற்றி பெறுவாராக. ஆந்திர நாட்டைப் பெற வேண்டுமென்பதில் அவர்களுக்குள்ள உரமான உணர்ச்சியைத் திரு. சீதாராம் அவர்கள் நன்கெடுத்துக் காட்டியும் தலைவர் திரு. நேரு அவர்கள் நேரிற் கண்டிருந்தும் அவர்கள் வேண்டுகோளை எக்காரணத்தாலோ ஆட்சியினர் பொருட்படுத்தாம லிருக்கின்றனர். இது முறையன்று.

ஆந்திரரும் தமக்குரிய உரிமைக்கு மிகுதியாகவே பெற ஆசைப்படுகின்றனர். இவ் வாசை மீண்டும் வேற்றவரை அடக்குதலுக்கும் அதனால் பூசலுக்கும் வித்திடுவதாகையால், உரிய உரிமை வழங்கப்படாததால் விளையும் தீங்கிற்கு ஒத்த தீங்கினை உடையதாகும். எனவே அவர்கள் தமக்குரிய உரிமையை மட்டுமே பெறுதல் வேண்டும். அதாவது, தம்மினும் வேறுபட்ட தமிழர்களின் நாட்டைச் சேர்ந்த சென்னையையும் சித்தூர் மாவட்டத்தின் தென்வட்டங்களையும் (1911ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரிக்கப் பட்டவை) தம் நாட்டு எல்லைக்குள் சேர்க்க வேண்டுமென்னும் அவாவினை விட வேண்டும்.

தமிழ் நாட்டைப் பொருத்தவரையேயும் அன்றி உலகில் பெருஞ் சிக்கல்கள் காணப்படும் தென்னாப்பிரிக்காவைப் போன்ற இடங்களிலும் வேற்றுமைக்குரிய உரிமை என்னும் இக் கொள்கையைப் பக்க நோக்கின்றிக் கையாண்டு வேற்றுமை உணர்ச்சியும் வெறுப் புணர்ச்சியும் அற்றதொரு மன்பதையைக் காண்போமாக.

—மேய்கண்டான்.


## குருகுல - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.
3. தனிமைமலை அல்லது அமைதி
விலை அணா 6.
4. நல் வாழ்க்கை
விலை அணா 1.
5. திருக்கழுக்குன்றப் பதிக விளக்கம்
விலை அணா 1.
6. கருக் கலை
விலை அணா 4.
7. மூன்று உண்மைகள்
விலை அணா 3.
8. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.
9. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.
10. திருமுருகாற்றுப்படை அகராதி
விலை அணா 8.
11. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.
12. ஆத்திசூடி . கருத்துரை
விலை 0-0-3.
ஷை நூறு அமைந்த கட்டு 1-2-0.

கிடைக்கும் இடம்:

குருதலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P.O., (S. I. R.)

# மெய்யரும் பொய்யரும்

வெ. சா. ஏகாம்பரம்.

அரிச்சந்திரன் அரசிழந்து, அருமை மகனை யிழந்து, ஆருயிரனைய தன் மனைவியை இழக்க வந்த காலையில், விசுவாமித்திர முனிவன் "பொய் யொன்று கூறி மனைவியுடன் இழந்தன யாவையும் பெறுக" என்று கூறிய பொழுது "இனி எமக் குளதென நினைக்கும் கதி யிழக்கினுங் கட்டுரை யிழக்கிலேம்" என்று கூறி வாய்மையை இழக்கச் சொன்ன முனிவனின் வாயை யடைத்து விட்டான். அதனாலன்றோ,

"உள்ளத்தால் பொய்யா
தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்"

என்ற பொய்யா மொழியின் வாக்கிற் கிணங்க ஒவ்வொருவர் உள்ளத்திலும் இன்று மிருந்து வருகின்றான்.

துரோணர், துரியோதனன் பக்கலில் நின்று பாண்டவரை எதிர்த்துக் கடும் போர் நிகழ்த்தினார். அதை ஆற்ருெணுது பாண்டவர்கள் வெருவி நின்றனர். அதைக் கண்ட கண்ணன், துரோணரைப் போரினின்றும் விலக்க எண்ணித் தருமரை, துரோணர் மகன் அசுவத்தாமன் இறந்தான் என்று பொய் கூறும்படி வற்புறுத்தினன். "பொற்கொடி மணத்தின் போதும், பொதுமக ளிடத்தின் போதும், நற்குல மழியும் போதும், நற்றவர் தம்மைக் கொல்ல அற்பர்கள் நினையும் போதும், அருஞ்சமர் விளையும் போதும், பொற்புடன் இவைக ளைந்தில் சொல்லலாம் பொய்கள் நூறும்" என்றதால் இவ் வைந்திடங்களிலும் கூறுகின்ற பொய் புரைதீர்ந்த நன்மை பயத்தலின் வாய்மை யிடத்து வைத்து எண்ணப்படுவதாகும். இதன்படி போர்முனையில் பொய் கூறுதல் அறநூல் உடன்பாடென் றறிந்தும் தருமன் அவ்வாறு பொய் கூற உடன்படவில்லை. பிறகு, கண்ணன் அசுவத்தாமன் எனும் அதே பெயர் கொண்ட யானை உண்மையில் இறந்ததைக் கூறும்படி சொல்லித் துரோணரை துக்கத்தி லாழ்த்திப் போரினின்றும் விலக்கினன். தருமன்,

பொய்யாமை பொய்யாமை
யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என்ற கொள்கையில் நின்று தமக்கே இடர் வரினும் வழுவாது ஒழுகியதால் அவன் தருமன் என்ற பெயரோடு இன்றும் நின்று நிலவுகிறான்.

கோடி பொருள் இழக்க நேரினும் நாக் கோடாமை வேண்டற் பாலதென்றும், உயிர்க்கே இடர் வரினும் உண்மைக்கு மாருக உரைத்தல் கூடாதென்றும், சில இடங்களில் பொய் கூற அறநூல் இடந்தரினும் அதற்கும் உடன்படா தொழுகுதலே மேலென்றும், மேற் கூறிய எடுத்துக் காட்டுகளால் அறிகின்றோம். எனினும், இவைகட்கு மாருன பொய்யையும் சேர்த்து முரண்படத் தலைப்பில் வைத்ததென்னை யெனின், பெரியோர் பலர் சில இடங்களில் பொய் கூறி யிருத்தலின் அவ் விடங்களை நாமும் ஆய்ந்து அறிதல் வேண்டுமென்பதற்கேயாம்.

நன்னெறி [சன்மார்க்கம்]யில் நின்று இறை பணியாற்றிய மாணிக்க வாசகரான் பிற்கு வியந்து இறைவன் நரியைப் பரியாக்கியும், வைகையில் வெள்ளப் பெருக் கெடுத்து ஓடச் செய்தும், தானே பிரம்படி பட்டும் நின்றுனெனின், அவர் இறைவனிடம் வைத்த அன்பு இத்துணைத் தென்று இயம்புதல் கூடுமோ? ஆயினும், மாணிக்க வாசகர்,

"செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனு னுண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே"

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

என்றும், "யானே பொய், என் னெஞ்சும் பொய், என் அன்பும் பொய்" என்றும் உண்மைக்கு மாறாக இறைவனிடத்தில் பொய் கூறி யிருக்கின்றார்.

இவரைப்போன்றே தாயுமான அடிகளும் கூறியிருக்கின்றார்கள். தாயுமான அடிகள் பிறக்கும்போது இறைவன் தாயாகி வந்து அருள் செய்தான். குழந்தைப் பருவத்திலேயே இறைவனும் தாயுமானாரும் அன்பினாலே ஒருவரை யொருவர் ஆட்படுத்திக் கொண்டார்கள். எனவே தாயுமானார் இளமை தொட்டு யான் எனது என்னும் பற்றுக்களை விட்டுச் சிலத்தோடிருந்து, விரதங்களைப் பற்றி, பொய் மறந்துங் கூறியறியாது ஒழுகினார். அவ்விதம் வாழ்ந்த அவர் "பொய்த்த மொழியல்லால் மருந்துக்கும் மெய்ம் மொழி புகன்றிடேன்" என்றும்,

"கல்லா லெறிந்துங் கைவில்லா
லடித்துங் கனிமதுரச்
சொல்லாற் றுதித்துநற் பச்சிலை
தூவியுங் கொண்டாரின
மெல்லாம் பிழைக்கனர் அன்பற்ற
நானினி யேதுசெய்வேன்"

என்று தான் அன்பற்றுப் பொய் கூறி வாழ்ந்ததாகவும் பொய் கூறி யிருக்கின்றார்.

இவர்களுக்கு மேலாகப் பொய் கூறி யிருக்கின்றார் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார். அவர் மக்கள் வாழ "நன்னெறி" என்னும் நூலை எழுதி அவ் வழியிலேயே தானும் ஒழுகியவர்; அன்றியும், கற்றதனாலாய பயனறிந்து இறைவனிடம் இடையறா அன்பு பூண்டு ஒழுகி வந்தவர். அவர் இறைவனிடங் கொண்ட அன்பினால் சோணசைல மாலை முதலிய நூல்களை இறைவன் பேரில் இயற்றியுள்ளார். அவர், "மாணிக்க வாசகர் உம்மிடம் உண்மையிலன்புடையவர், அன்பிலேனெனப் பொய் கூறிவிட்டார். உண்மையிலேயே அன்பில்லாதவனாகிய யான் அன்பில்லாதவனென்ற உண்மையை உம்மிடங் கூறுகிறேன். பொய் சொன்ன அவர்க்கருளிய நீ உண்மையைச் சொல்லுகின்ற எனக்கருளாய்" என்ற கருத்துடன்,

"அருங்கவி வாத வூரனே
முதலோ ரன்பிலே னென்றது
வேண்டி
இரங்குதல் பொய்ம்மை
அன்பிலே னெனயா னியம்பலே
மெய்யெனக் கருளாய்"

என்று இறைவனிடம் வேண்டி யிருக்கின்றார்.

இவ்வாறு இறைனிடம் இடையறா அன்பும், ஒழுக்கமும் பூண்டு வாழ்ந்த அடியார்கள் அன்பிலேன் பொய்யன் எனப் பொய் கூறி யிருத்தலின் நாமும் அவ் விடங்களை ஆய்ந்து அறிந்து கூறல் வேண்டும். இன்றேல், ஆணவ மலம் நம்மை அகப்பற்று புறப்பற்றுகளுக்கேதுவான யான் எனது என்னும் செருக்கி லழுத்தி இவ்வுலகினின்றும் ஈடேற விடாது செய்து விடும்.

இன்றைய உலகில் மக்கள் நீதி மன்றங்களிலும், பிற இடங்களிலும் பொய் சொல்லி வயிறு வளர்த்தலையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். அவர் தம் மனைகளில், மன்றோரஞ் சொன்னார் மனையில் சேர்வன, தவறாது சேரும். அவர்கள் புறப் பற்றுக்களைக்கூட அறிந்து அறுக்க வல்லவரல்லர். எனவே அவர்கள் ஈடேறு நாள் எந்நாளோ!

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்).